**அரச ஈட்டு, முதலீட்டு வங்கி சேமலாப நிதியம் - ‘‘பீ’’ - 2014**

அரச ஈட்டு, முதலீட்டு வங்கி சேமலாப நிதியம் - ‘‘பீ’’ இன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகையையும் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக்கணக்கு, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும், ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1979 யூன் 01 ஆம் திகதிய 38/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பகுதி 1: – பிரிவு (1) இன் 9 ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுக் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு

செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழிவுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழிவுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழிவுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரச ஈட்டு, முதலீட்டு வங்கி சேமலாப நிதியம் - ''பீ'' இன் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் நியமங்கள்**

எல்கேஏஎஸ் 07 இல் குறிப்பிடப்பட்டவாறு குறித்த படிவத்தில் நிதயத்தின் காசுப் பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது நிலையான வைப்புக்கள் மற்றும் பெறவேண்டிய வட்டிகள் கணிப்பீட்டுத் தவறுகள் காரணமாக முறையே ரூபா 13,542 மற்றும் ரூபா 10,849 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) நிதியத்தின் நிதிக்கூற்றில் காட்டப்பட்ட தனிப்பட்ட நிதிகளின் மீதிக்கும் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் நிதிக்கூற்றில் காட்டப்பட்ட நேரொத்த மீதிக்கும் இடையில் ரூபா 1,795,887 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 1979 யூன் 01 ஆந்திகதிய 38/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி விதி 04 இன் பிரகாரம், உறுப்பினர்களின் செலவில் காணப்படுகின்ற சகல பணமும் ஏதாவது அரசாங்க வங்கிகளில் தொகுதிக்கடன்களில் அல்லது அரசாங்க பிணைகளில் முதலீடு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும் எதிர்மாறாக ரூபா 5,715,483 தொகையான சகல பணங்களும் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்டிருந்தன.

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டிலுள்ள உறுப்பினர்களின் கணக்கில் செலவுவைக்கப்பட்ட வட்டி ரூபா 840,061 ஆன நேரொத்த மிகையுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 816,974 ரூபா உறுப்பினர்களின் கணக்கில் செலவு வைக்கப்பட்ட வட்டியாகவுள்ளது. ஆகையால், நிதிசார் விளைவுகளில் ரூபா 23,087 அல்லது 2.75 சதவீதமான குறைவைக் காட்டுகின்றது. மீளாய்வாண்டின் போது இருக்கின்ற உறுப்பினர்களின் ஓய்வுபெறல் காரணமாக குறைநிரப்பு பங்களிப்பு வீழ்ச்சியடைந்திருந்தமை இந்த எதிர்மறையான போக்கிற்கான பிரதான காரணமாக இருந்தது.

## 3.2 செயற்பாட்டு மீளாய்வு

### 3.2.1 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, கடந்த 3 ஆண்டுகள் மற்றும் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் கீழே பொழிப்பாக்கப்பட்டு காட்டப்பட்டுள்ளன.

| | | 2014 | 2013 | 2012 | 2011 |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | நிலையான வைப்புக்கள் மற்றும் சேமிப்புக் கணக்குகள் மற்றும் உறுப்பினர்களிற்கான வட்டி வருமானம் | 646,420 | 343,215 | 1,280,552 | 1,675,320 |
| (ii) | உறுப்பினர்களிற்கான கடன்கள் மீதான வட்டி வருமானம் | - | - | 110,860 | 67,197 |
| (iii) | உருவாக்கப்பட்ட மொத்த வட்டி வருமானம் | 646,420 | 343,215 | 1,391,412 | 1,742,517 |
| (iv) | வங்கிக் கட்டணங்கள் | (2,000) | - | - | - |
| (v) | வரிச் செலவினம் | (81,697) | (84,006) | (187,232) | (181,306) |
| (vi) | தேறிய வட்டி வருமானம் | 562,723 | 259,209 | 1,204,180 | 1,561,211 |
| (vii) | அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி மூலம் குறைநிரப்பு பங்களிப்பு | 254,251 | 580,852 | 1,095,370 | 251,853 |
| | உறுப்பினருக்கு செலவு வைக்கப்பட்ட மொத்த வட்டி | 816,974 | 840,061 | 2,299,550 | 1,813,064 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) நிலையான வைப்புக்கள் மற்றும் சேமிப்புக் கணக்குகளின் வட்டி வருமானம் 2011 - 2013 வரையான காலத்தின் போது ரூபா 1,675,320 இலிருந்து ரூபா 343,215 ஆக அல்லது 79.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது ரூபா 646,420 அல்லது 88.34 சதவீதத்திற்கு வட்டி வருமானம் அதிகரித்திருந்தது.

ஆ) குறைநிரப்பு பங்களிப்பு 2011 இல் ரூபா 251,853 இலிருந்து 2012 இல் ரூபா 1,095,370 அல்லது 334.92 சதவீதம் அதிகரித்திருந்த அதேநேரம் இது 2013 – 2014 வரையான காலத்தின் போது ரூபா 580,852 இலிருந்து ரூபா 254,251 அல்லது 56.22 சதவீதம் குறைவடைந்திருந்தது.

**3.2.2 உறுப்பினர்களின் உதவுதொகை**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் உறுப்பினர்களின் கணக்குகளிற்கு செலவு வைக்கப்பட்ட உறுப்பினர் பங்களிப்பு, வங்கி பங்களிப்பு, வட்டி என்பவற்றின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| | 2014 | | | | 2013 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **உறுப்பினர்களின் பங்களிப்பு** | **வங்கியியின் பங்களிப்பு** | **செலவு வைக்கப்பட்ட வட்டி** | **மொத்தம்** | **உறுப்பினர்களின் பங்களிப்பு** | **வங்கியின் பங்களிப்பு** | **செலவு வைக்கப்பட்ட வட்டி** | **மொத்தம்** |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| முற்கொண்டு வரப்பட்ட மீதி | 1,089,893 | 1,634,664 | 5,034,137 | 7,758,694 | 996,709 | 1,494,889 | 4,224,720 | 6,716,318 |
| <u>கூட்டுக</u> | | | | | | | | |
| ஆண்டின் போதான பங்களிப்பு | 95,385 | 143,078 | 816,975 | 1,055,438 | 93,184 | 139,776 | 840,061 | 1,073,021 |
| **மொத்தம்** | **1,185,278** | **1,777,742** | **5,851,112** | **8,814,132** | **1,089,893** | **1,634,665** | **5,064,781** | **7,789,339** |
| கழி | | | | | | | | |
| 2012 பங்களிப்புக்கு செலவுவைக்கப்பட்ட வட்டி மிகை | | | | | - | - | - | - |
| மிகையாக செலவு வைக்கப்பட்ட வட்டி | - | | | - | - | - | (30,644) | (30,644) |
| **முற்கொண்டு செல்லப்பட்ட மீதி** | **1,185,278** | **1,777.742** | **5,851,112** | **8,814,132** | **1,089,893** | **1,634,665** | **5,034,137** | **7,758,695** |

2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் நிதியத்திற்கான மொத்த பங்களிப்புகள் ரூபா 17,583 அல்லது 1.63 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் உறுப்பினர்களின் ஓய்வு பெறல் காரணமாக மீளாய்வாண்டின் போது உறுப்பினர்களிற்கு எவ்வித பங்களிப்பும் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.2.3 உறுப்பினர்களிற்கு வழங்கப்பட்ட கடன்கள்

கணக்காய்விற்குத் தரப்பட்ட தகவல்களின் படி, உறுப்பினர்களுக்கு மீளாய்வாண்டின் போது எவ்வித கடன்களும் வழங்கப்பட்டிருக்காததுடன் உறுப்பினர்களிடமிருந்து அறவீடுகளும் செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன் ரூபா 7,275 தொகை நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் இருந்தது.

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பித்தலிலுள்ள தாமதம்

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பிஎவ்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.3 ஆம் பந்தியின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 2 மாதங்களிற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 08 இலேயே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 4.2 நிதியத்தின் ஸ்தாபிப்பு, அதிகாரம் மற்றும் நோக்கங்கள்

1975 இன் 13 ஆம் இலக்க இலங்கை அரச ஈட்டு, முதலீட்டு வங்கிச் சட்டத்தின் 85(2) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியம் தாபிக்கப்பட்டிருந்தது. இதன் படி இலங்கை விவசாய மற்றும் கைத்தொழில் கடன் கூட்டுத்தாபனத்தின் மாதாந்த சம்பளம் கொடுக்கப்படும் சகல ஊழியர்களும் இலங்கை அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் ஊழியர்களாக கருதப்படுவதுடன் வங்கியில் அவர்களின் தொழில் புரிவதற்கான நிபந்தனையாக சேமலாப நிதியத்தின் உறுப்பினர்களாவதுடன் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் ஊழியர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தனர். அத்துடன் நிதியமானது, பணிப்பாளர் சபை பொது முகாமையாளர் அல்லது அவருக்காக அந்த நேரத்தில் பதில் கடமையாற்றும் நபரினால் வருடாந்தம் நியமிக்கப்படும் ஒரு பணிப்பாளர், மற்றும் நிதியத்தின் உறுப்பினர்களால் வருடாந்தம் நியமிக்கப்படும் ஒரு உறுப்பினர் ஆகியோரைக் கொண்ட நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையால் நிருவகிக்கப்பட வேண்டும்.